# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

***2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 10 ஆந் திகதிய***

**பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2023.11.10 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## *உள்நாட்டு நம்பிகைப் பொறுப்பு (திருத்தம்)*

## *1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்பு சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்*

*நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*

---

*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.*

**விலை: ரூபா 9.00** **தபாற்செலவு : ரூபா 50.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2*** : இவ்வாசகம் 1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுக்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவினைத் திருத்துகின்றதென்பதுடன் திருத்தப்பட்டவாறான பிரிவின் சட்டப் பயனானது 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் சட்டத்தின் கீழ் ஆனால் (117 ஆம் அத்தியாயமான) ஆவணங்களைப் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் அல்லாமல் பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுக்களின் சட்ட விளைவாந்தன்மையினை ஏற்பாடு செய்வதற்கானதுமாகும்.

***வாசகம் 3*** : இவ்வாசகம் ஆவணங்களைப் பதிவு செய்தல் கட்டளைச் சட்டத்தின் கீழ் ஏலவே பதிவு செய்யப்பட்ட உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச் சீட்டுகளின் வலுவுறுத்தற்படற்பாலத்தக்க தன்மைக் காலப்பகுதி தொடர்பாகவும் 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் சட்டம் நடைமுறைக்கு வருவதன்மேல் சொல்லப்பட்ட சட்டத்தின் கீழ் அந்த உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்பு பற்றுச் சீட்டுக்களைப் பதிவு செய்கின்ற தேவைப்பாடு தொடர்பாகவும் அவை மேலும் வலுவுறுத்தப்படற்பாலதாக இருப்பதாகவும் அவற்றின் முன்னுரிமை தொடர்ந்து நிலவுவதற்காகவும் ஏற்பாடு செய்கின்றது.

*ச.வ.ஓ 67/2017*

## 1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்பு சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக.

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்**

1. (1) இச்சட்டம், 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்

(2) இப்பிரிவின் ஏற்பாடுகள் தவிர்ந்த இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இதனகத்துப் பின்னர் "நியமிக்கப்பட்ட தேதி" எனக்குறிப்பீடு செய்யப்படும். வர்த்தமானியில் வெளியிடப்பட்ட கட்டளைமூலம் அமைச்சர் நியமிக்கப்படக்கூடியவாறான அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(3) இப்பிரிவின் ஏற்பாடுகள் பாராளுமன்றத்தில் எத்தேதியன்று சட்டமூலம் சட்டமாக வருகின்றதோ அத்தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

**1990 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்**

2. ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறாம் ஆண்டின் 14 ஆம் இலக்க, உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டுக்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் " விற்பனை உண்டியல் ஒன்றாக அது ஆவணப் பதிவுக் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்படுமிடத்தும்." என்னும் சொற்களுக்குப் பதிலாக, " விற்பனை உண்டியலொன்றாக அது 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுமிடத்தும்" என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

PL 014101 - 475 (2023/10)

ஆவணங்கள் பதிவுக் கட்டளைச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப் பட்ட உள்நாட்டு நம்பிக்கைப் பொறுப்புப் பற்றுச்சீட்டுகள் தொடர்பான ஏற்பாடுகள்

3. (1) நியமிக்கப்பட்ட தேதியன்று விற்பனை உண்டியலொன்றாக 117 ஆம் அத்தியாயமான ஆவணப் பதிவுக் கட்டளைச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டொன்று வலுவிலுள்ளதாக இருக்குமிடத்து, அத்தகைய உள்நாட்டு நம்பிக்கைப்பொறுப்புப் பற்றுச்சீட்டு நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகளைக்கொண்டவொரு காலப்பகுதிக்குத் தொடர்ந்தும் வலுவுறுத்தப்படற்பாலதாகவிருத்தல் வேண்டும். ஆனால், அது அத்தகைய இரண்டாண்டு காலப்பகுதி முடிவுறுவதற்கு முன்னர் விற்பனை உண்டியலொன்றாக 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப் பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின் இயைபான ஏற்பாடுகளின்கீழ் பதிவுசெய்யப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படுதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட விற்பனை உண்டியலொன்று 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படுவதன்மீது, அத்தகைய விற்பனை உண்டியல் தொடக்கத்தில் எத்தேதியிலிருந்து சட்டமுறையாக வலுவுறுத்தப்படற்பாலதாக வந்ததோ அத்தேதியிலிருந்து முழுநிறைவாக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும், அத்துடன் அத்தகைய விற்பனை உண்டியல் தொடக்கத்தில் சட்டமுறையாக வலுவுறுத்தப்படற்பாலதாக வந்தநேரத்தில் அது எந்த முன்னுரிமைக்கு உரித்துடையதாக வந்ததோ அந்த ஏதேனும் முன்னுரிமை தொடர்ந்தும் மேலோங்குதல் வேண்டும்.

(3) நியமிக்கப்பட்ட தேதியிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவுறுவதற்கு முன்னர் 2023 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, பிணைப்பொறுப்பளிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்படாத (1) ஆம் உட்பிரிவில் குறிப்பீடுசெய்ய்பட்ட விற்பனை உண்டியலொன்று அத்தகைய காலப்பகுதி முடிவடைந்தபின்னர் சட்டமுறையாக வலுவுறுத்தப்படற்பாலதல்லாததாக வருதல் வேண்டும்.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.